


**12.09.2026 – 13.45 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி, 18வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக, சீன அதிபர் Xi Jin Ping உடன் புதுதில்லியில் இன்றுமாலை இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

2. இளையோரின் ஆற்றலும், திறனும் முறையாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை தமிழக ஆளுநர் திரு.ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில வருவாய் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

4. மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவிற்கான முன்னேற்பாட்டு பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சட்ட அமைச்சர் திரு.நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

5. . தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் தேசிய மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

------------

பிரிக்ஸ் மாநாடு

பிரதமர் திரு.நரேந்திரமோடி, சீன அதிபர் Xi Jin Ping உடன் புதுதில்லியில் இன்றுமாலை இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

18வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் ஒருபகுதியாக நடைபெறும் பேச்சுவார்த்தையில், எல்லை விவாகாரம் உட்பட பரஸ்பரம் நலன் பிராந்திய, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் இதில் இடம்பெறுகின்றன.

சீன அதிபரின் இந்திய வருகையையொட்டி, புதுதில்லி - சீனாவின் Guang zhou இடையே 6 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பயணியர் விமான போக்குவரத்து சேவை வரும் 21 ஆம் தேதி தொடங்குகிறது.

முன்னதாக, எத்தியோப்பிய பிரதமர் அபி அஹமது அலி உடன் பிரதமர் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை இன்றுகாலை மேற்கொண்டார்.

பொருளாதாரம், பாதுகாப்பு, திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகாிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் இருதலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

இதனிடையே புதுதில்லி பாரத் மண்டபத்தில் 18வது பிரிக்ஸ் உச்சி மாநாடு இன்று மாலை தொடங்குவதையொட்டி அனைத்து முன்னேற்பாட்டு பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைவரையும் உள்ளடக்கிய சர்வதேச நிர்வாகம், பன்முகத் தன்மையை வலுப்படுத்துதல் என்ற கருப்பொருளில் நடைபெறும் இந்த இரண்டு நாள் உச்சி

மாநாட்டில் 11 பிரிக்ஸ் நாடுகள் உட்பட நட்பு நாடுகளின் தலைவர்களும் பங்கேற்கின்றனர்.

------------

<u>பிரல்ஹாத் ஜோஷி</u>

இந்தியாவின் புத்தாக்கத் திறன் மிக விரைவான வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில், பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக புதுதில்லியில் நடைபெறும் பாரத் புத்தாக்க கண்காட்சி, உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தொலைநோக்குத் திட்டங்களால், உயர்கல்வி ஆராய்ச்சி நிறுவனங்கள் இளம் புத்தாக்க திறனை சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்வதாகவும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

------------

<u>கிசான் மந்தன் யோஜனா</u>

நாடு முழுவதும் சிறு, குறு விவசாயிகளின் சமூகப் பாதுகாப்பை பிரதமரின் கிசான் மந்தன் யோஜனா உறுதி செய்வதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், இதுவரை 24 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

60 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு மாதந்தோறும் குறைந்தபட்சம் 3 ஆயிரம் ரூபாய் ஒய்வூதியத்திற்கு வகை செய்கிறது.

------------

முதலமைச்சர்

தமிழகத்தில் சர்வதேச தரத்திலான மோட்டார் விளையாட்டு நகரம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் இன்று ஆய்வு செய்கிறார்.

லண்டனில் அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ள அவர், சில்வர் ஸ்டோன் கார் பந்தய மைதானத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை பார்வையிடுவதுடன், தொழில் முதலீட்டாளர்களையும் சந்திக்கிறார்.

------------

ஆளுநர்

இளையோரின் ஆற்றலும், திறனும் முறையாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை தமிழக ஆளுநர் திரு.ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் வலியுறுத்தியுள்ளார்.

திருச்சி தேசிய கல்லூரியில் உயர்கல்வியில் விளையாட்டு மறுவரையறை தொடர்பான கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், உயர்கல்வி நிறுவனங்கள் விளையாட்டின் இன்றியமையா பங்கை மாணாக்கரிடையே எடுத்துரைக்க வேண்டும் என்றார்.

தேசிய கல்விக் கொள்கை 2020ல் உயர்கல்வி மற்றும் விளையாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் அறிமுகம் செய்யப்பட்டதாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவிலில் ஆளுநர் தரிசனம் மேற்கொண்டார்.

------------

சாலமன் பாப்பையா

தமிழ் இலக்கியவாதியும் பேராசிரியாருமான சாலமன் பாப்பையா மறைவிற்கு குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

நகைச்சுவையுடன் கூடிய அன்னாரது அறிவுசார் பட்டிமன்ற பேச்சாற்றல் எண்ணற்ற தலைமுறையினருக்கு சமூக சிந்தனைகளை மேம்படுத்தியதாக கூறியுள்ளார்.

மதுரையில் சாலமன் பாப்பையாவின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் இன்று நடைபெற்றது.

------------

<u>செங்கோட்டையன்</u>

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை மற்றும் சூப்பர் எல்நினோ தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில வருவாய் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பேரிடரின் போது பொதுமக்களுக்கோ, கால்நடைகளுக்கோ சேதம் ஏற்படாத வகையில், அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளை இம்மாத இறுதிக்குள் முழுமையாக முடிக்க, அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டர்.

------------

<u>நிர்மல்குமார்</u>

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவிற்கான முன்னேற்பாட்டு பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சட்ட அமைச்சர் திரு.நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

பாதுகாப்பை கருத்தில் கொண்டு கும்பாபிஷேகம் முடிவடைந்த பின்னர் ஒரே நேரத்தில் அதிக அளவிலான பக்தர்கள் கோவில் வளாகத்திலிருந்து வெளியேறாத வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளதாக தெரிவித்தார்.

……………… வாய்ஸ் ………..

இதனிடையே, பக்தர்களின் வசதிக்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சிறப்பு ரயில் மற்றும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

------------

லோக் அதாலத்

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் தேசிய மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் இன்று நடைபெறுகிறது.

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு இதில் சமரச முறையில் தீர்வு காணப்பட்டு வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் 3 அமர்வுகளில் நடைபெறும் லோக் அதாலத்தில் ஜீவனாம்சம், வாகன விபத்து இழப்பீடு, காசோலை மோசடி உள்ளிட்ட பல்வேறு வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது.

வேலூரில் தேசிய மக்கள் நீதிமன்றத்தை தொடங்கி வைத்த மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி இளவரசன், விபத்தில் உயிரிழந்த 3 குடும்பங்களுக்கு 83 லட்சம் ரூபாய் இழப்பீட்டிற்கான ஆணைகளை வழங்கினார்.

------------

உயர்நீதிமன்றம்

மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த தடை விதிக்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனு இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சொந்த அரசியல் காரணங்களுக்காக இத்தொகுதிகளின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளதை சுட்டிக்காட்டி,

இடைத்தேர்தலுக்கு தடை விதிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் தவெக-விற்கு ஆதரவு அளிப்பது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாளை தனது முடிவை அறிவிக்க உள்ளது.

கட்சியின் மாநில குழு இதற்கான முடிவை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

------------

<u>காகித கூல் - வாய்ஸ்</u>

காகித ஆலைகளின் காகித தயாரிப்பிற்காக தமிழக வனத்தோட்ட கழகத்தின் மூலம் கூழ் மரங்கள் உற்பத்தி செய்து வழங்கப்படுவதாக தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தின் திருச்சி மண்டல புதிய மேலாண்மை இயக்குநர் திரு.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின்கீழ், கிராம மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டங்களையும் செயல்படுத்தி வருவதாக கூறினார்.

வனப்பகுதிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இக்கழகம் செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

------------

<u>திருச்செந்தூர் வாய்ஸ்</u>

திருச்செந்தூர் கடல் 50 அடி அளவிற்கு உள்வாங்கியதால், சேதமடைந்த சிலைகள் வெளியே காணப்படுகின்றன.

கடலில் நீராடுவதில் சிரமங்களைத் தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

------------

இருவரி

தொடர் விடுமுறையை ஒட்டி, கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டை, செங்குறிச்சி சுங்கச்சாவடியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

சென்னை – திருச்சி ஜிஎஸ்டி சாலையில் 2 கிலோமீட்டர் தூரத்திற்கு வாகனங்கள் அணிவகுத்து நிற்பதால், தென் மாவட்டங்களுக்கு இரண்டு மாற்று வழித்தடங்களில் வாகனங்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புதிய தொழில் முனைவோர்கள் அரசின் மானியக் கடனுதவி பெற விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரதீக் தாயள் தெரிவித்துள்ளார்.

பொதுப்பிரிவுனருக்கு திட்ட மதிப்பீட்டில் 25 சதவிகிதம், மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிட பழங்குடியின தொழில் முனைவோருக்கு 35 சதவிகித மானியம் வழங்கப்படுவதால் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் கூறியுள்ளார்.

------------

தூத்துக்குடி

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திற்கு ஆண்டின் பசுமை துறைமுகம் விருது உள்ளிட்ட இரண்டு விருதுகள் கிடைத்துள்ளது

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் **2026-**ம் ஆண்டிற்கான சிறந்த நவீன துறைமுகம் மற்றும் மின்மய மாற்றம் திட்டத்திற்கான விருதுகள் இத்துறைமுகத்திற்கு வழங்கப்பட்டது.

------------

கிரிக்கெட்

ஆசிய கோப்பை மகளிர் 20 - 20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் துபாயில், இந்தியா நாளை நடப்பு சாம்பியன் இலங்கையை எதிர்கொள்கிறது.